சாட்சிய வாக்குமூலம்

மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

| | | |
|---|---|---|
| நீ.சா | 1 | நாள் : 08.01.2024 |
| அசல் வழக்கு எண். | 4/2022 | |
| பெயர் | | த/பெ |
| வயது | | தொழில் |
| ஜாதி | | மதம் |
| கிராமம் | | தாலூக்கா |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழிசெய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

கேள்வி : உங்கள் பெயர் என்ன?

பதில் : முத்துராமன்

கேள்வி : உங்கள் அம்மா, அப்பா பெயர்கள் என்ன?

பதில் : பானுமதி, கணேசன்

கேள்வி : உங்கள் அண்ணன் பெயர் என்ன?

பதில் : ரகு

கேள்வி : இந்த இடம் என்ன இடம் என்று தெரியுமா?

பதில் : தெரியாது.

கேள்வி : வாதி பெயர் என்ன?

பதில் : சீதாராமன் என் தம்பி

கேள்வி : வாதி என் அண்ணன் மீதும், தாயார் மீதும் வழக்கு போட்டுள்ளார் அதுபற்றி தெரியுமா?

பதில் : தெரியாது.

கேள்வி : இன்று யாருடன் நீதிமன்றம் வந்துள்ளீர்கள்?

பதில் : இன்று என் அம்மா மற்றும் அண்ணியுடன் வந்துள்ளேன்.

கேள்வி : அண்ணி பெயர் என்ன?

பதில் : ரகுவின் மனைவி பிரீத்தி

கேள்வி : உங்கள் சகோதரி பெயர் என்ன?

பதில் : பிரேமா. அவரும் இங்கு வந்துள்ளார்.

கேள்வி : உங்களை யார் கவனித்து கொள்கிறார்கள்?

பதில் : என் அம்மாதான் கவனித்து கொள்கிறார்.